செ.வெ.எண். 19/ஆகஸ்ட்　　　　　　　　　　　　　　　　　தேதி : 10.08.2016

# பத்திரிக்கை செய்தி

## தேசிய குடற்புழு நீக்கம் நாளையொட்டி அல்பெண்டசோல் மாத்திரைகளை மாணவிகளுக்கு தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.





மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில் தேசிய குடற்புழு நீக்கம் நாள் தருமபுரி அவ்வையார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் இன்று (10.08.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து மாணவிகளுக்கு அல்பெண்டசோல் மாத்திரைகளை வழங்கி தெரிவித்ததாவது :-

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில் தேசிய குடற்புழு நீக்கம் 10.08.2016 இன்றும் விடுப்பட்ட குழந்தைகளுக்கான சிறப்பு முகாம் ஆகஸ்ட் 17ம் தேதியன்றும் அனைத்து அரசு, அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் நடைபெறும். குடற்புழு தொற்றினால் பாதிக்கப்பட்ட நபர் திறந்த வெளியில் மலம் கழிக்கும் போது புழுக்களின் முட்டைகள் மண்ணில் கலந்து மலர்கின்றன. முட்டைகள் மற்றும் சிறு புழுக்கள் குடலில் வளர்ச்சி பெற்று முதிர்ந்த புழுக்களாகி உடல் நலத்திற்கு பாதிப்பு ஏற்படுத்துகிறது. புழு தொற்றினால் ஏற்படும் பாதிப்புகளால் ஊட்டச்சத்து குறைபாடு, சோர்வு மற்றும் சுகவீனம், பசியின்மை, இரத்தசோகை, குமட்டல், வாந்தி, வயிற்று போக்கு ஆகியவை ஏற்படுகிறது. குடற்புழு நீக்கத்தினால் குழந்தைகளுக்கு ஏற்படும் நன்மைகளானது இரத்த சோகையை தடுக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து சுறுசுறுப்பாக இருக்க உதவுகிறது. அறிவு திறன் மற்றும் உடல் வளர்ச்சியை மேம்படுத்தவும், ஆரோக்கியமாக இருக்கவும் உதவுகிறது.

1 முதல் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அறை மாத்திரையும், 2 முதல் 19 வயதுள்ள குழந்தைகளுக்கு 1 மாத்திரையும் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனிநபர் கழிப்பறை அமைவதற்கு ரூ. 12 ஆயிரம் மானியம் வழங்கி வருகிறார்கள். தனி நபர் கழிப்பறை அமைக்காதவர்கள் அரசு வழங்கும் மானிய தொகை பெற்று கழிப்பறை அமைக்க முன் வர வேண்டும் கழிப்பறை இல்லாத வீடுகளில் மாணவ, மாணவியர்கள் கழிப்பறையின் அவசியத்தை பெற்றோரிடத்தில் எடுத்துரைத்து உடனடியாக கழிப்பறை அமைக்க வலியுறுத்த வேண்டும். 100 சதவீதம் திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கமற்ற மாவட்டமாக தருமபுரி

அமைவதற்கு துணை நிற்போம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு. ஜெ. ஜெகதீஸ்குமார், நகராட்சி மருத்துவ அலுவலர்கள் மரு. மல்லிகா, மரு. பூவிழி, வட்டார மருத்துவ அலுவலர் மரு. ஆர். சுவீந்தர், மாவட்ட கல்வி அலுவலர் (பொ) திரு. பாலாஜி, அவ்வையார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திருமதி. தெரசால் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : - செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.